# கடற்கரை கவியரங்கு எண் – 621



நாள் **01-01-2023**

## மனமே அறம்!

கனவுகள் கூடிடும் காலம் பிறந்தது!
நினைவுகள் அதனில் நெருங்கி வளர்ந்தது!
மனமது சூடிடும் மயக்கம் யாவுமே,
கனவுப் பதிவில் கனன்று எழுவதே!

சினமது சிந்தையைச் சிதைப்பது போலே,
கனவும் சிலநாள் அறிவைத் தொலைக்கும்!
மனமதை நாமும் மருவின்றிச் செய்தால்,
தினமும் வாழ்வதும் திருநாள் ஆகுமே!

பதமாய் அறிவின் மயக்கம் நீக்கி,
இதமாய் மனதுடன் இயைந்து தொடர்ந்தால்,
இன்னல்கள் இல்லா நிலையே மலரும்!
கண்கவர் காட்சியாய் உலகம் தெரியும்!

மண்பதை யாவும் தோழமை ஆகிட,
எண்ணிடும் போழ்தில் இதயம் ஒளிரும்!
திண்ணமாய் வாழ்வியல் தெளிவைச் சுட்டும்!
வண்ணம் என்பதும் அழகியல் என்றே,

எண்ணத் தோன்றும் யாவையும் நிறைவாய்!
வண்ணமாய் அறிவை வகைப் படுத்தியே,
வரம்புகள் இல்லா சிந்தையில் நிறைந்து,
வள்ளுவன் சொன்ன பிறப்பொக்கும் என்னும்,

வாழ்வியல் கலனின் மகத்துவம் புரியும்!
சூழ்நிலை என்றே சொல்லி வாழாமல்,
ஆழ்ந்து மனத்தை ஆளுமை செய்து,
வாழ்வியல் அறத்தை வகுத்துக் காத்திட,

ஒவ்வொரு மாந்தரும் உறுதி பூண்டால்,
செவ்விய வாழ்வியல் சிதைவின்றி மலரும்!
ஒவ்வாச் சிந்தையை ஒதுக்கி வைத்து,
செவ்விய மனத்துடன் சிதைவின்றி வாழ்வோம்!

- **கவிவளவன்** ஆகிய **கு.ப. அசோகன்,**
29-12-2022 (10.45 PM)

